Registered as a News Paper　　மக்கள் 04　　விலை ரூபா: 5:00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　PEOPLES DAILY　　மக்கள் தினசரி

நாதம்: 02　　திருவள்ளுவர் ஆண்டு 2022　　புரட்டாதி 15　　(01 - 10 - 1991)　　செவ்வாய்க்கிழமை　　ஓசை: 225

## வடபகுதி அரசவங்கிகள்மீது பாவனையாளர்கள் வழக்கு

வட பகுதியில் இயங்கும் அரச வங்கிகள் மீது பாவனையாளர்கள் பலர் வழக்குத் தொடுத்துள்ளனர்.

இந்த அரச வங்கிகளில் தாம் வைப்பிலிட்ட பணத்தை திருப்பிக் கொடுக்கதொடர்ந்தும் இவ் வங்கிகள் மறுத்து வருவதாலேயே இவ்வங்கிகளின் பாவனையாளர்கள் இவற்றின் மீது வழக்குத் தொடுத்துள்ளனர்.

மேலும் பலபாவனையாளர்கள் தாம் மேற்படி காரணத்திற்காக வழக்குத்தொடரப் போவதாக அறிவிக்கும் எச்சரிக்கைக் கடிதங்களை வங்கிகளின் முகாமையாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கு அமைதிச் சூழல் அவசியம்

# போருடன் பேசுவது சாத்தியமில்லை

## தொண்டமானின் பேட்டி குறித்து புலிகள் வட்டாரங்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

ஒரு புறம் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்க, மறுபுறம் பேச்சு வார்த்தைகளை நடத்தமுடியும் என திரு. தொண்டமான் பத்திரிகை ஒன்றிற்கு விடுத்த பேட்டியில் குறிப்பிட்டிருப்பது விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது. போர்நிறுத்தம் கொண்டுவரப்பட்டு ஒரு சமாதான, சகஜ நிலை தோன்றினால் தான் உருப்படியான பேச்சுக்களை நடத்த முடியுமென இவ் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகள் மூலமும், பொருளாதார அழுத்தங்கள் வாயிலாகவும் தமிழ்மக்களை ஒரு நெருக்குதல் நிலைக்குள் வைத்துக் கொண்டு அரசியல் தீர்வுபற்றி பேசமுடியாதென்றும், பேச்சுக்களுக்கு முதற்படியாக, தமிழ் மக்கள் மீது அநியாயமாக திணிக்கப்பட்ட இந்த அழுத்தங்கள் நீக்கப்பட வேண்டுமென புலிகள் இயக்கப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார். இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று கொண்டு பேச்சுக்களை நடத்த சிங்கள அரசு முற்படுமானால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதம் வழங்கியதில் இரகசியம் எதுவுமில்லை

- ரணில் விக்கிரமசிங்கா

புலிகளுக்கு சிறிலங்கா அரசு ஆயுதங்கள் வழங்கியதில் எந்தவித இரகசியமும் இல்லை என்றுதொழில் துறை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரிடையே உரையாற்றிய அமைச்சர் ரணில் விக்கிரம்சிங்கா, சிங்களத் தீவிரவாதிகளின் கிளர்ச்சி நடவடி

'பிரேமா'விற்கு...

## சார்க்கை நடாத்த ஏற்பாடு

(கொழும்பு)

சார்க் உச்சி மாநாட்டைக் கொழும்பில் திட்டமிட்டவாறு நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வருவதாகச் சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இதனைத் தெரிவித்தஉள்துறை அமைச்சு இதற்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்குமாறு மக்களையும், நிறுவனங்களையும் கேட்டுள்ளது.

## மாவட்டத்திற்குள்ளான காரியாலயப் 'பயணத்திற்கு பயணப்படி நீக்கம்

(நல்லூர்)

கல்வி அலுவலகங்களில் காரியாலய விடயம் தொடர்பாகத் தத்தமது மாவட்டத்தினுள் செய்யும் பிரயாணத்துக்காக வேறெந்தப் பிரயாணப்படியும் வழங்கப்படமாட்டாது என்று வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அனைத்துக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார். திரட்டிய பிரயாணப்படி பெறும் உத்தியோகத்தர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. சாதாரணம் பழைய பாடத்திட்டப்படி டிசம்பரில் பரீட்சை

பழைய பாடத்திட்டப்படி புதிய க. பொ த. (சா. த) பரீட்சை எதிர்வரும் மார்கழி மாதம் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் பழைய பாடத் திட்டப்படி பரீட்சைக்குத் தோற்றத் தவறிய மாணவர்கள் இம்முறை நடைபெறும் பரீட்சையில் பழைய பாடத்திட்டப்படி பரீட்சைக்குத் தோற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## கன்னியாகுமரியில் பொலிஸ் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி; 9 பேர் காயம்

(சென்னை)

கன்னியாகுமரி மாவட்டத்தில்தமிழக பொலிசார் நடத்தியதுப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஒன்பது பேர் காயமடைந்ததாகவும் மாநில சட்டம் ஒழுங்குத் துறைத் தலைவர் தேவாரம் தெரிவித்தார்.

நேற்றுக்காலை பேருந்து நடத்துனர்களுக்கும் மீனவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கலகத்தை அடக்கச் சென்ற தமிழக காவல்துறையினர்மீது இவர்கள் கற்களை வீசினார்கள் என்றும் இதனால் பொலிசார் சுடவேண்டி ஏற்பட்டது என்றும் தேவாரம் தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு கால்களுடன் குழந்தை

(லீமா)

லத்தீன் அமெரிக்க நாடான பெருவில் நான்கு கால்களுடன் ஆண் பெண் உறுப்புகளுடன் குழந்தை ஒன்று பிறந்துள்ளது.

பெருவின் தலைநகரான லீமாவில் உள்ள தேசிய ஆஸ்பத்திரியில் இந்த அறுவாரக் குழந்தை இருப்பதாகவும் அக் குழந்தையின் உயிரைக்காப்பாற்ற டாக்டர்கள் போராடி வருவதாகவும் கூறப்படுகிறது.

## விளையாட்டு குழு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விளையாட்டுக்குழு கலந்துரையாடல் 02-10-91 காலை 10.30 மணியளவில் கோண்டாவில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி, யாழ். மாவட்டச்செயலகத்தில்நடை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# மண்டூரில் புலிகள் அதிரடித் தாக்கு

# 11 படை பலி; ஆயுதங்கள் மீட்பு

...வருவதாகவும் கூறப்படுகிறது.

# தொண்டமானின் பேட்டி குறித்து புலிகள் வட்டாரங்கள் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

ஒரு புறம் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்க, மறுபுறம் பேச்சு வார்த்தைகளை நடத்தமுடியும் என திரு. தொண்டமான் பத்திரிகை ஒன்றிற்கு விடுத்த பேட்டியில் குறிப்பிட்டிருப்பது விடுதலைப் புலிகள் வட்டாரங்களில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது. போர்நிறுத்தம் கொண்டுவரப்பட்டு ஒரு சமாதான, சகஜ நிலை தோன்றினால் தான் உருப்படியான பேச்சுக்களை நடத்த முடியுமென இவ் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இராணுவ நடவடிக்கைகள் மூலமும், பொருளாதார அழுத்தங்கள் வாயிலாகவும் தமிழ்மக்களை ஒரு நெருக்குதல் நிலைக்குள் வைத்துக் கொண்டு அரசியல் தீர்வுபற்றி பேசமுடியாதென்றும், பேச்சுக்களுக்கு முதற்படியாக, தமிழ் மக்கள் மீது அநியாயமாக திணிக்கப்பட்ட இந்த அழுத்தங்கள் நீக்கப்பட வேண்டுமென புலிகள் இயக்கப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார். இராணுவ மேலாதிக்க நிலையில் நின்று கொண்டு பேச்சுக்களை நடத்த சிங்கள அரசு முற்படுமானால்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதம் வழங்கியதில் இரகசியம் எதுவுமில்லை

- ரணில் விக்கிரமசிங்கா

புலிகளுக்கு சிறிலங்கா அரசு ஆயுதங்கள் வழங்கியதில் எந்தவித இரகசியமும் இல்லை என்று தொழில் துறை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரிடையே உரையாற்றிய அமைச்சர் ரணில் விக்கிரம்சிங்கா, சிங்களத் தீவிரவாதிகளின் கிளர்ச்சி நடவடிக்கையை ஒடுக்கவும், சிங்களவர் மற்றும் தமிழர்களுக்கிடையே மோதல்கள் ஏற்படும் வாய்ப்பைத் தடுக்கவும் வசதியாக இது செய்யப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

## 'பிரேமா'விற்கு உதவுமாறு அரபுலீக் வற்புறுத்து

(றியாட்)

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை ஆதரிக்குமாறு அரபுலீக் வற்புறுத்தி வருகிறது என தெரிவிக்கப்படுகிறது.

பாலஸ்தீன பிரச்சினையில் இலங்கை சரியான நிலைப்பாட்டை எடுத்துள்ளமைக்காக நன்றி தெரிவித்தும், இலங்கை அரசுடனான பல்வேறு துறை உறவுகளை ஆதரிக்குமாறு கோரியும் செப்டம்பர் 12 ஆம் திகதி நடைபெற்ற அரபுலீக் வெளிநாட்டமைச்சர்கள் கூட்டத்தில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## பாராளுமன்றத்தினுள் புலிகள் நுழைய முயற்சி

'இந்து' விமர்சனம்

விடுதலைப் புலிகள் சிறிலங்கா பாராளுமன்றத்துக்குள் நுழைய பின் கதவால் முயற்சிகளை மேற்கொள்கிறார்கள் என்று 'இந்து' பத்திரிகை தெரிவித்துள்ளது.

ஈரோஸ் இயக்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆறு பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாகப் பதவியேற்கவுள்ளார்கள் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரபுத்துவ பிரமுகர்களின் கொடுமையான பிரசாரம்

-பிரேமதாசா

(கொழும்பு)

"பல்வேறு அரசியல் கட்சிகளையும் சேர்ந்த பிரபுத்துவ பிரமுகர்கள் ஒன்றிணைந்து இன்று கொடுமையான பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்" என்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற பொது நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பிரேமதாசா பொது மக்களை அடிமைப்படுத்த தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றனர்.

இந்த அரசாங்கம் அதிகாரத்தில் இருக்கும் வரை அவர்களது திட்டங்கள் செயலுருப் பெறமாட்டாது என்று அவர்களே அறிவார்கள் என்றும் பிரேமதாசா தெரிவித்தார்.

## சார்க்கை நடாத்த ஏற்பாடு

(கொழும்பு)

சார்க் உச்சி மாநாட்டைக் கொழும்பில் திட்டமிட்டவாறு நடாத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து வருவதாகச் சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இதனைத் தெரிவித்த உள்துறை அமைச்சு இதற்குச் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்குமாறு மக்களையும், நிறுவனங்களையும் கேட்டுள்ளது.

## மாவட்டத்திற்குள்ளான காரியாலயப் 'பயணத்திற்கு பயணப்படி நீக்கம்

(நல்லூர்)

கல்வி அலுவலகங்களில் காரியாலய விடயம் தொடர்பாகத் தத்தமது மாவட்டத்தினுள் செய்யும் பிரயாணத்துக்காக வேறெந்தப் பிரயாணப்படியும் வழங்கப்படமாட்டாது என்று வட கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அனைத்துக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவுறுத்தியுள்ளார். திரட்டிய பிரயாணப்படி பெறும் உத்தியோகத்தர்

(4ஆம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. சாதாரணம் பழைய பாடத்திட்டப்படி டிசம்பரில் பரீட்சை

பழைய பாடத்திட்டப்படி புதிய க. பொ. த. (சா. த) பரீட்சை எதிர்வரும் மார்கழி மாதம் நடைபெறவுள்ளது.

கடந்த வருடம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் பழைய பாடத் திட்டப்படி பரீட்சைக்குத் தோற்றத் தவறிய மாணவர்கள் இம்முறை நடைபெறும் பரீட்சையில் பழைய பாடத்திட்டப்படி பரீட்சைக்குத் தோற்றலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு குழு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி விளையாட்டுக்குழு கலந்துரையாடல் 02-10-91 காலை 10.30 மணியளவில் கோண்டாவில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி, யாழ். மாவட்டச்செயலகத்தில் நடை

(4ஆம் பக்கம் பார்க்க)

## கன்னியாகுமரியில் பொலிஸ் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி; 9 பேர் காயம்

(சென்னை)

கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழக பொலிசார் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஒன்பது பேர் காயமடைந்ததாகவும் மாநில சட்டம் ஒழுங்குத் துறைத் தலைவர் தேவாரம் தெரிவித்தார்.

நேற்றுக்காலை பேருந்து நடத்துனர்களுக்கும் மீனவர்களுக்கும் இடையில் ஏற்பட்ட கலகத்தை அடக்கச் சென்ற தமிழக காவல்துறையினர் மீது இவர்கள் கற்களை வீசினார்கள் என்றும் இதனால் பொலிசார் சுடவேண்டி ஏற்பட்டது என்றும் தேவாரம் தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மண்டூரில் புலிகள் அதிரடித் தாக்கு

# 11 படை பலி; ஆயுதங்கள் மீட்பு

(மட்டக்களப்பு)

மண்டூரில் ரோந்து சென்று கொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் ஒன்பது சிறிலங்கா இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். காயமடைந்த இரு இராணுவத்தினர் மருத்துவமனையில் மாண்டனர், பல ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

நேற்றுக்காலை 6-20 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்டூரில் 13ஆம் கிராமத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து ரோந்து நடவடிக்கைக்காக புறப்பட்ட இராணுவத்தினர் முகாமில் இருந்து சுமார் 500 யார் முன்னேறி வந்த சமயம் விடுதலைப் புலிகள் இராணுவத்தினர் மீது திடீர் தாக்குதலை நடாத்தினார்கள். இத்தாக்குதலில் ஒன்பது சிறிலங்கா இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். பல இராணுவ சிப்பாய்கள் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் இருவர் வைத்தியசாலையில் மரணமடைந்தனர்.

இராணுவத்தினரிடம் இருந்து பல ஆயுதங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றிக் கொண்டனர். கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| ★ ரி 56-2 ரக துப்பாக்கிகள் | 06 |
| ★ இதற்குரிய மகசீன் | 07 |
| ★ ரி 56 சொலிட்பட் ரக துப்பாக்கிகள் | 03 |

இத்தாக்குதலின் போது பத்து இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு உறுதி செய்ததை நேற்று மாலை ரூபவாஹினி தனது செய்தி அறிக்கையில் அறிவித்தது.

ஆதேவேளை பாலையடி வெட்டையில் அமைந்திருக்கும் சிறிலங்கா இராணுவ முகா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் புலிகளுக்கு எதிராக நடவடிக்கை

பாதுகாப்பு படையினர் அம்பாறை மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் புலிகளுக்கு எதிராக நடவடிக்கையிலீடுபட்டுள்ளனர். லங்கா புவத் கூற்றுப்படி அம்பாறை மாவட்டத்தில் வித்தனைப்பற்று வடக்கு உப அரச அதிபர் பிரிவிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்பற்று உப அரச அதிபர் பிரிவிலும் திங்கள் காலை 6 மணிமுதல் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டுள்ளது.

# பாலம்போட்டாறில் கண்ணிவெடி; பவள் வாகனம் முற்றாகச் சேதம்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள பாலம்போட்டாறு என்ற இடத்தில்ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவ, கடற்படையினர் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவத்தினரின் ''பவள்'' கவச வாகனம் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டிருக்கின்றது.

நேற்று நண்பகல் 1.20 மணியளவில் பாலம்போட்டாறு இராணுவ முகாமிலிருந்து கண்டாவளை கடற்படை முகாமிற்குச் சென்றுகொண்டிருந்த இராணுவ, கடற்படையினரின் வாகனத் தொடரின் மீது விடுதலைப்புலிகள் கண்ணிவெடித்தாக்குதலை நடாத்திய போது 'பவள்' கவச வாகனம் முற்றாகச் சேதமாகியது.

இவ்வாகனத்தில் வந்த இராணுவத்தினருக்கு ஏற்பட்ட உயிரிழப்பு பற்றிய செய்தியை அறிந்துகொள்ள முடியவில்லை.

பல்கலைக்கழக அனுமதி;

## பெறத் தவறியவர்கள் உயர் கல்வி பெற வாய்ப்பு

(கொழும்பு)

பல்கலைக் கழகங்களில் அனுமதி பெறக் கூடிய புள்ளிகளைப் பெற்றுப் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவு செய்யப் படாதவர்களுக்கும் உயர் கல்வியைத் தொடரும் வாய்ப்புக் கிடைக்கும் என உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒன்பது மாகாணங்களில் நிறுவப்படவிருக்கும் ஒன்பது பல்கலைக் கழகக் கல்லூரிகளுக்கு இவர்கள் எதிர் வரும் நவம்பர் முதல் தெரிவு செய்யப்படுவார்கள் என்றும்,

இந்தக்கல்லூரிகளை அமைக்கும் வேலை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் இந்தப் பாடசாலை மாணவர்களைத் தெரிவு செய்யும் வேலையும் மேற் கொள்ளப் பட்டுள்ளது என்றும் கல்வி அமைச்சு செவித்துள்ளது

ஆனால் இப் பல்கலைக் கழகங்களுக்கு எத்தனை பேர் தெரிவு செய்யப்படுவார்கள் என்பதுபற்றிஇன்னமும் இறுதி முடிவு செய்யப்படவில்லை என்றும் இவர்களை விரைவில் தெரிவு செய்வோம் என்றும் உயர் கல்வி அமைச்சு தெரிவித்தது.

## ஆசிரியர் தினக் கொண்டாட்டம்

(வட்டக்கச்சி)

சர்வதேச ஆசிரியர் தினத்தை எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 4, 5, 6ஆம் திகதிகளில் விசேசிறப்பாக கொண்டாட கிளிநொச்சி கல்வித்திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தி லுள்ள ஒன்பது கொத்தணிகளின் ஆசிரியர்களுக்கும் இடையில் தற்பொழுது விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன இறுதிநாள் நிகழ்வுகளில் ஆசிரியர்களுக் இடையில் இயல், இசை, நடனப் போட்டிகளும்இடம்பெற இருப்பதுடன் நீண்ட காலம் சேவையாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர்கள்கௌரவிக்கப்படவும் உள்ளனர்.

## சட்டப் பேரவையில் எம். ஜி. ஆர்.

(சென்னை)

மறைந்த தமிழக முன்னாள் முதலமைச்சர் எம் ஜி ராமச்சந்திரனின் உருவப்படம் தமிழக சட்டப் பேரவையில் வைக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர்செல்வி ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

எம் ஜி ஆரின் உருவப்படம் சிறந்த ஓவியர் ஒருவரால் வரையப்படுகிறது என்றும், அது பூர்த்தியானதும் சட்டப் பேரவையில் வைக்கப்படும் என்றும் ஜெயலலிதாதெரிவித்தார்.

## புங்குடுதீவில் ஆசிரியர் தினவிழா

(புங்குடுதீவு)

வேலணை கல்விக் கோட்டத்தின் கோட்ட மட்டத்திலான ஆசிரியர் தினவிழா 2 - 10 - 91 புதன்கிழமையும், 3-10-91 வியாழக்கிழமையும் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறும். இதற்கான சகல நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொண்டு வருவதாக புங்குடுதீவு கொத்தணி வட்டாரங்கள் தெரிவித்தன.

## தியாகி திலீபன் தடகள விளை. போட்டி முடிவுகள்

(நமது நிருபர்)

தியாகிதிலீபன் ஞாபகார்த்தமாக கடந்த இரு நாட்களாக நடைபெற்ற தடகள விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஞாயிறன்று முடிவுற்றன. இதில் பங்கு பற்றி வெற்றியீட்டிய வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோரது பெயர் விபரங்களும், வட்டவைகள் பெற்ற புள்ளி விபரங்களும் கீழே தரப்படுகின்றன.

### நெடுந்தூர ஓட்டம்

★ மரதன் ஆண்கள்

1ஆம் இடம், வ. சண்முகம்பிள்ளை யாழ். 2ஆம் இடம் இ. உதயகுமார் உடுவில் 3ஆம் இடம் வெ ஆன்சலம். யாழ். 4ஆம் இடம், அ. செல்வரத்தினம் சண்டிலிப்பாய். 5ஆம் இடம் க. ஏகாம்பரத்தினம் சண்டிலிப்பாய் வட்டவை.

பெண்கள்

1ஆம் இடம் கோ ஜீவராணி சண்டிலிப்பாய் 2ஆம் இடம் க. திலகசோதி, சாவகச்சேரி. 3ஆம் இடம் இ. சுஜித்தா சண்டிலிப்பாய் 4ஆம் இடம் சி. தமிழரசி உடுவில். 5ஆம் இடம் சி. வரதாமதி சாவகச்சேரி.

★ சயிக்கிள் ஆண்கள்

1ஆம் இடம் வை. வைகலைநாதன் சங்கானை. 2ஆம் இடம் ஐ. சோமசுந்தரம் சாவகச்சேரி. 3ஆம் இடம் ம. திருமவேல்வரசன் சண்டிலிப்பாய். 4ஆம் இடம்இ.ரவிச்சந்திரன் சண்டிலிப்பாய். 5ஆம் இடம் ப. சந்திரகுமார் நல்லூர்.

பெண்கள்

1ஆம் இடம் தி. சுஜித்தா சண்டிலிப்பாய். 2ஆம் இடம் பி சுவிட் சவோனியாழ் 3ஆம் இடம் ச. ஞானசெளரி சாவகச்சேரி. 4ஆம் இடம் க. கோமளா சாவகச்சேரி. 5ஆம் இடம்த.ராசமலர்சாவகச்சேரி.

★ வேகநடை ஆண்கள்

1ஆம் இடம் கோ. ஜெயரூபன் சண்டிலிப்பாய். 2ஆம் இடம் க. யேசுதாசன் யாழ். 3ஆம் இடம் சி. நாகேந்திரன் சாவகச்சேரி. 4ம் இடம் ம சஞ்சீவன் நல்லூர். 5ஆம் இடம் மூ. திருவருள்நாதன் யாழ்

பெண்கள்

1ஆம்இடம்தி.சுஜித்தா சண்டிலிப்பாய். 2ஆம் இடம் தி. சுகிலா தெல்லிப்பளை. 3ஆம் இடம் சி. மனோன்மணி தெல்லி. 4ஆம் இடம் ஜ. கலைவாணிபருத்தித்துறை 5ஆம் இடம் இ. சுகயராணி யாழ்.

### விசேட பரிசில்கள்

வீதி ஓட்டத்தை ஓடி முடித்த மிகக் குறைந்த வயது போட்டியாளர்களுக்கு இந்தப் பரிசு வழங்கப்பட்டது.

ஆண்கள்

சண்டிலிப்பாய் பிரிவைச் சேர்ந்த 10 வயது மாணவன் ச. சுகிர்தராஜ்

பெண்கள்

சாவகச்சேரி பிரிவைச் சேர்ந்த 09 வயது மாணவி கு. சுமதி

### தனிநபர் விருதுகள்

★ தட நிகழ்ச்சிகளில் சிறந்த ஆண்:

பரிசுக்குரியவர்: இ. சோதிலிங்கம், நிகழ்ச்சி: 400 மீற். புள்ளிகள்: 715.

★ கள நிகழ்ச்சிகளில் சிறந்த ஆண்:

பரிசுக்குரியவர்: க. மயில்வாகனம், நிகழ்ச்சி: ஈட்டி எறிதல், புள்ளிகள்: 600

★ தட நிகழ்ச்சிகளில் சிறந்த பெண்:

பரிசுக்குரியவர்: ச. இங்லானா சுமங்கலியா, நிகழ்ச்சி: 200 மீற், புள்ளிகள்: 532

★ கள நிகழ்ச்சிகளில் சிறந்த பெண்:

பரிசுக்குரியவர்: ச. இல்லானா சுமங்கலியா, நிகழ்ச்சி: நீளம்பாய்தல், புள்ளிகள்: 650

★ போட்டிகளில் சிறந்த வீரர்:

பரிசுக்குரியவர்: இ. சோதிலிங்கம், நிகழ்ச்சி: 400 மீற், புள்ளிகள்: 715

ஆண் நிகழ்ச்சிகளில் / வட்டவைகளின் நிலை

01. யாழ்ப்பாணம் - 51
02. பருத்தித்துறை - 16
03. சங்கானை - 15
04 சாவெட்டி - 13
05. தெல்லிப்பளை - 12
06. சண்டிலிப்பாய் - 10
07. உடுவில் 7, பளை 7
09. நல்லூர் 6, கோப்பாய் 6
11. மருதங்கேணி - 3
12. பளை -1

பெண் நிகழ்ச்சிகளில் / வட்டவைகளின் நிலை

01. தெல்லிப்பளை - 81
02. சண்டிலிப்பாய் - 31
03. நல்லூர் - 25
04. யாழ்ப்பாணம் - 7
05. பருத்தித்துறை - 3
06. பளை -
07. உடுவில் -
08. சாவகச்சேரி -
09. கரவெட்டி -
10. மருதங்கேணி -
11 கோப்பாய் -
12. சங்கானை -

★ தடகள நிகழ்ச்சிகளில் மொத்தபுள்ளிகளின் அடிப்படையில் வட்டவைகளின் புள்ளி நிலை

01. தெல்லிப்பளை - 93
02 யாழ்ப்பாணம் - 58
03. சண்டிலிப்பாய் - 41
04. நல்லூர் - 31
05. பருத்தித்துறை - 19
06. சங்கானை - 15
07 கரவெட்டி - 13
08. பளை 7. உடுவில் 7
10. கோப்பாய் - 6
11. மருதங்கேணி - 3
12. சாவகச்சேரி - 1

## 'விநாயகர்' வெற்றி பெற்றது

(யாழ். விளையாட்டு நிருபர்)

நொதேர்ன்ஸ்போட்ஸ் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற 6 ஓவர் கொண்ட 6 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில், நல்லூர் விநாயகர். வி. கழகம் கொழும்புத்துறை வி. கழகத்தை 19 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய விநாயகர் வி. க. மொத்தம் 55 ஓட்டங்களை பெற்றது. இதில் செல்வன் கோணேஸ் 24 ஓட்டங்களை மிகவும் சிறப்பாக விளையாடிப் பெற்றார்.

கொழும்புத்துறை ஜெட் விளையாட்டுக் கழகம் தனது முதலாவது இனிங்சில் மொத்தம் 36 ஓட்டங்களைப் பெற்றது

இப்போட்டி நல்லூர் செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

பெருந்திரளான கிரிக்கெட் ரசிகர்கள்போட்டியைப் பார்த்தனர்.

## அல்லாஹ்வின் நாட்டம்

பாகிஸ்தானில் கொலைக் குற்றத்திற்காக கைகால்கள் துண்டிக்கப்பட்ட இரு அமெரிக்க சகோதரர்கள் அதனை அல்லாஹ்வின் வேலையென்று நம்புகின்றார்கள்.

இது பற்றித் தெரிய வருவதாவது, கடந்த ஜூன் மாதம் பெஷாவரில் உள்ள வங்கியொன்றிலிருந்து 82,500 ரூபாவை கொள்ளையிட்டார் என்று இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது.

பதின்மூன்று வருடங்களுக்கு முன்னாள் ஜெனரல் ஷியா வுல் ஹக்கினால் கொண்டு வரப்பட்ட ஷரிய சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட்ட முதல் வெளிநாட்டவர்கள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரும் பொருட் கண் காட்சி

மாமனிதர் கலைஞானியின் அரும்பொருட்கண்காட்சியம் பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஆதரவில் நாவலர் மண்டபத்தில் நடைபெற்று வருகிறது.

வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குஉபவேந்தர் பேராசிரியர் துரைராசா திறந்துவைத்தார். இந்த கண்காட்சி இம்மாதம் 6ஆம் திகதிவரை நடைபெறும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

வெளி நிலைப் பட்டப்படிப்பு பதிவு நீடித்தல் 1990/91

(வர்த்தக முதற்தேர்வு / கலை முதற் தேர்வு)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1990/91 கல்வியாண்டில் வெளிநிலைத் தேர்வு நாடிகளாக வர்த்தக முதற் தேர்வு / கலை முதற் தேர்வுகளுக்குப் பதிவு காலம் 30-09-1991 இல் இருந்து 12 - 10 - 1991 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன்.

– பதிவாளர்

(B/ 3226)



4-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 02 - 01 - 1944

இறப்பு 14 - 10 - 1987



புதிய உயர் கல்லூரி

(NEW College Of High Studies)

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L 91



தேசிய தமிழ் நாடக விழா - 1992



நினைவு கூருகின்றோம்...

1991 - 10 - 01



சோதி

(வைந்திலிங்கம் பரமநாதன்)

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலையில் சிறிலங்காப் படையினரால் படுகொலை

## கொண்டாட்டம்

(வட்டக்கச்சி)

சர்வதேச ஆசிரியர் தினத்தை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 4, 5, 6ஆம் திகதிகளில் மிகச்சிறப்பாக கொண்டாட கிளிநொச்சி கல்வித்திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஒன்பது கொத்தணிகளின் ஆசிரியர்களுக்கும் இடையில் தற்பொழுது விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்றன இறுதிநாள் நிகழ்வுகளில் ஆசிரியர்களுக் இடையில் இயல், இசை, நாடகப் போட்டிகள் இடம்பெற இருப்பதுடன் நீண்ட காலம் சேவையாற்றி ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவும் உள்ளனர்.

வரையப்படுகிறது என்னும், அது பூர்த்தியானதும் சட்டப் பேரவையில் வைக்கப்படும் என்றும் ஜெயலலிதா தெரிவித்தார்.

## புங்குடுதீவில் ஆசிரியர் தினவிழா

(புங்குடுதீவு)

வேலணை கல்விக் கோட்டத்தின் கோட்ட மட்டத்திலான ஆசிரியர் தினவிழா 2 - 10 - 91 புதன்கிழமையும், 3-10-91 வியாழக்கிழமையும் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறும். இதற்கான சகல நடவடிக்கைகளையும் துரிதமாக மேற்கொண்டு வருவதாக புங்குடுதீவு கொத்தணி வட்டாரங்கள் தெரிவித்தன.

சண்டிலிப்பாய் 2ஆம் இடம் க. திலகசோதி, சாவகச்சேரி. 3ஆம் இடம் சி. சுஜித்தா சண்டிலிப்பாய் 4ஆம் இடம் சி. தமிழரசி உடுவில். 5ஆம் இடம் சி. வரதாமதி சாவகச்சேரி.

★ சயிக்கிள் ஆண்கள்

1ஆம் இடம் வை. லைலைநாதன் சங்கானை. 2ஆம் இடம் ஐ. சோமசுந்தரம் சாவகச்சேரி. 3ஆம் இடம் ம. திருமலேஸ்வரன் சண்டிலிப்பாய். 4ஆம் இடம் இ. ரவிச்சந்திரன் சண்டிலிப்பாய். 5ஆம் இடம் ப. சந்திரகுமார் நல்லூர்.

பெண்கள்

1ஆம் இடம் தி. சுஜித்தா சண்டிலிப்பாய். 2ஆம் இடம் பி. சவிட் சவோன்யாழ். 3ஆம் இடம் ச. ஞானகௌரி சாவகச்சேரி. 4ஆம் இடம் க. கோமளா சாவகச்சேரி. 5ஆம் இடம் த. ராசமலர் சாவகச்சேரி.

★ வேகநடை ஆண்கள்

1ஆம் இடம் கோ. ஜெயரூபன் சண்டிலிப்பாய். 2ஆம் இடம் க. யேசுதாசன் யாழ். 3ஆம் இடம் சி. நாகேந்திரன்

தனிநபர் வெற்றுகள்

★ தட நிகழ்ச்சிகளில் சிறந்த ஆண்:

பரிசுக்குரியவர்: இ. சோதிலிங்கம், நிகழ்ச்சி: 400 மீற். புள்ளிகள்: 715.

★ கள நிகழ்ச்சிகளில் சிறந்த ஆண்:

பரிசுக்குரியவர்: க. மயில்வாகனம், நிகழ்ச்சி: ஈட்டி எறிதல், புள்ளிகள்: 600

★ தட நிகழ்ச்சிகளில் சிறந்த பெண்:

பரிசுக்குரியவர்: ச. இக்லானா சுமங்கல்யா, நிகழ்ச்சி: 200 மீற், புள்ளிகள்: 532

★ கள நிகழ்ச்சிகளில் சிறந்த பெண்:

பரிசுக்குரியவர்: ச. இல்லானா சுமங்கல்யா, நிகழ்ச்சி: நீளம்பாய்தல், புள்ளிகள்: 650

★ போட்டிகளில் சிறந்த வீரர்:

பரிசுக்குரியவர்: இ. சோதிலிங்கம், நிகழ்ச்சி: 400 மீற், புள்ளிகள்: 715

ஆண் நிகழ்ச்சிகளில் / வட்டவைகளின் நிலை

01. யாழ்ப்பாணம் - 51
02. பருத்தித்துறை - 16
03. சங்கானை - 15
04 கரவெட்டி - 13
05. தெல்லிப்பளை - 12
06. சண்டிலிப்பாய் - 10
07. உடுவில் 7, பளை 7
09. நல்லூர் 6, கோப்பாய் 6

06. சங்கானை - 15
07. கரவெட்டி - 13
08. பளை 7. உடுவில் 7
10. கோப்பாய் - 6
11. மருதங்கேணி - 3
12. சாவகச்சேரி - 1

## 'விநாயகர்' வெற்றி பெற்றது

(யாழ். விளையாட்டு நிருபர்)

ரோகேர்ன் ஸ்போட்ஸ் சஞ்சிகையின் ஆதரவில் நடைபெற்ற 6 ஓவர் கொண்ட 6 பேர் நொக்கவுட் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் நல்லூர் விநாயகர். வி. கழகம் கொழும்புத்துறை வி. கழகத்தை 19 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய விநாயகர் வி. க. மொத்தம் 55 ஓட்டங்களை பெற்றது. இதில் செல்வன் கோணேஸ் 24 ஓட்டங்களை மிகவும் சிறப்பாக விளையாடிப் பெற்றார்.

கொழும்புத்துறை ஜெட் விளையாட்டுக் கழகம் தனது முதலாவது இனிங்சில் மொத்தம் 36 ஓட்டங்களைப் பெற்றது

இப்போட்டி நல்லூர் செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

பெருந்திரளான கிரிக்கெட் ரசிகர்கள் போட்டியைப் பார்த்தனர்.

வருகிறது.

வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு உபவேந்தர் பேராசிரியர் துரைராசா திறந்துவைத்தார். இந்த கண்காட்சி இம்மாதம் 6ஆம் திகதிவரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்து ... வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன்.

- பதிவாளர்

(B/ 3226)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | அழிப்பு |
|---|---|
| 02 - 01 - 1944 | 14 - 10 - 1987 |

### திரு. சின்னப்பு சண்முகசுந்தரம்

நான்கு ஆண்டுகளானாலும் நீங்காது
நின் நினைவுகள் எந்நாளும்
நாமும் நின் அடி சேர்ந்திட்டால் - அன்றி
நிம்மதி ஏது நம் வாழ்வில்.

49/1, வில்வத்தெரு வீதி, கொழும்புத்துறை. (B/3213)

மனைவி, பிள்ளைகள்.

---

## புதிய உயர் கல்லூரி

(NEW College Of High Studies)

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

### A'L 91 DAY CLASSES

(சகல பாடங்களுக்குமான மீட்டலும் கடந்த கால வினா - விடையும்)

ஆரம்பம் — 2-10-91

(8 மணி)

நிர்வாகி

அருள்நங்கை

(B/ 3217)

---

## COMPUTER CLASSES

★ BASIC ★ dBASE III+ ★ LOTUS 1-2-3

★ 02 - 10 - 91 Day Batch (2 months) 10 30 a m
★ 05 - 10 - 91 Weekend Batch (4 months 10 - 30 a.m
★ மாணவர்களின் நன்மை கருதி வகுப்புகள் குறுகிய காலத்திற்குள் முடிக்கப்படும்.
★ செய்முறைப்பயிற்சிகளும் Practicals) வழங்கப்படுகின்றன.

மேலதிக விபரங்கட்கு

வடஇலங்கை தொழில்நுட்பக் கல்லூரி
North Ceylon Technical Institute
14, St. Peter's Lane, Jaffna.

(B-3215)

---

## தேசிய தமிழ் நாடக விழா - 1992

## தேசிய தமிழ் நாடகப் போட்டிகள்

இந்துசமய, கலாசாரத் திணைக்களம் 1992ம் வருடம் நடாத்தவிருக்கும் தேசிய தமிழ் நாடகவிழாவை முன்னிட்டு, தேசிய ரீதியில் தமிழ் நாடகப் போட்டிகளை நடாத்தவிருக்கிறது. இதில் பங்கு பற்ற விரும்பும் தமிழ் மன்றங்களோ, குழுக்களோ படிவங்களையும் விதிமுறைக் கோவையையும் பணிப்பாளர், இந்துசமய கலாசாரத் திணைக்களம், 9வது மாடி, 'றக்ஷண மந்திரய', 21, வொக்ஷல் வீதி, கொழும்பு - 2, என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

சுய முகவரி எழுதப்பட்ட 9'' X 4'' அளவு கடித உறை ஒன்றையும் இணைக்குக.

திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பப்படிவங்களில் மாத்திரமே விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத்திகதி 1991 ஒக்டோபர் 31

த. வாமதேவன்
செயலாளர்
இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சரின் அலுவலகம்.

(B/3224)

---

## நினைவு கூருகின்றோம்...

1991 - 10 - 01



### சோதி

(வைத்திலிங்கம் பரமநாதன்)

1987 ஆம் ஆண்டு இதேதினத்தில் திருக்கோணமலையில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட 2 தமிழர்கள்

1988 ஆம் ஆண்டு ஆனைக்கோட்டையில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமெய்திய

வாசு (இ. வாசுதேவன் - வல்வெட்டித்துறை)

மயிலிட்டியில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது ஆதரவாளர் சோதி (வைத்திலிங்கம் பரமநாதன் - வீரமாணிக்கதேவன்துறை மயிலிட்டி)

1989 ஆம் ஆண்டு பழம்பாசிப் பகுதியில் இந்தியப் படையினரின் மிதிவெடியில் சிக்கி பின்னர் சயனைட் உட்கொண்டு வீரமரணமெய்திய

மேஜர் குமுதன் (சரவணமுத்து தளையசிங்கம் - சேமமடு)

இதே ஆண்டு தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1990ஆம் ஆண்டு மட்டக்களப்பு, 10 ஆம் கட்டைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட உழவு இயந்திரவிபத்தில் உயிரிழந்த

பாபட் (இ. சுப்பிரமணியம் செல்வராஜ் - கன்னன்குடா, மட்டக்களப்பு)

திருக்கோவில் பகுதியில் சிறிலங்காப் படையினரால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டு பின் முகாமை அண்டிய கடலோரத்தில் சடலமாக மீட்கப்பட்ட தமிழ் இளைஞன்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/3219)

## சிந்தனைக்கு

"உன் சொல்லுக்கு ஒப்பச் செயலையும்
செயலுக்கு ஒப்பச் சொல்லையும் இணங்கச் செய்"
— வில்லியம் ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்
31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 01-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ எண் 05

# சந்தேகத்தை 'தொண்டா' உருவாக்குகின்றார்

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பது தொடர்பாக மீண்டும் ஒரு கடிதத்தை அமைச்சர் தொண்டமான் விடுதலைப்புலிகளுக்கு அனுப்பி வைத்துள்ள அதேவேளை அக்கடிதம் தொடர்பாகவும், பேச்சுவார்த்தை விடயம் தொடர்பாகவும் பத்திரிகைகளுக்குப் பேட்டியும் அளித்துள்ளார்.

அமைச்சர் தொண்டமான் சென்ற மாத ஆரம்பத்தில் அனுப்பிய முதலாவது கடிதம் தொடர்பாக விடுதலைப் புலிகள் பதில் கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பி வைத்திருந்தனர். அக்கடிதத்தில் ஒரு உருப்படியான தீர்வுத்திட்டத்தை நோக்கிய கருத்துப்பரிமாற்றங்களுக்கும், எண்ணங்களுக்கும் கடிதமூலம் தொடர்புவைத்துக் கொள்வது நடைமுறைக்குச் சிரமமானது அத்துடன் சமாதானப் பேச்சுக்கள் தொடர இது உகந்த வழிமுறையும் அல்ல, நேரடியாக சந்தித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதே சிறந்த வழிமுறையாகும் எனக் குறிப்பிட்டு பேச்சுவார்த்தை நடத்த யாழ்ப்பாணம் வருமாறும் அழைப்பு விடுத்திருந்தனர்.

ஆனால், அமைச்சர் தொண்டமான் புலிகளின் இக்கருத்தினைக் கருத்தில் கொள்ளாதது போல் மீண்டும் தீர்வுத்திட்டத்தையும், கருத்துப்பரிமாற்றங்களையும் கடித மூலம் தெரிவிக்குமாறு கோரியுள்ளமை அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டம் பற்றிய சந்தேகத்திற்குரிய கேள்வியையே எழுப்புகின்றது.

மேலும், யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி போராளிகள் தம்மைப் பலப்படுத்திக் கொண்டனர் என்று முன்னர் குற்றம் சாட்டப்பட்டது. இந்த அனுபவத்தை அடுத்தே யுத்த நிறுத்தம் இல்லாமலே பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனத் திரு. தொண்டமான் கொழும்பில் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறாயின், சிறிலங்கா அரசாங்கமும் இராணுவத் தரப்பும் கருதுவது போன்றே ஓர் இராணுவ அழுத்தத்துடன் கூடிய ஒரு திணிப்பையா தொண்டமான் விரும்புகிறார் என்ற எண்ணமும் ஏற்படுகின்றது.

கடந்த யுத்த நிறுத்த காலத்தில் விடுதலைப்புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொண்டதனால் யுத்தநிறுத்தம் முறிவடைந்து போர் ஆரம்பிக்கவில்லை. சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகளினாலும்; வடக்கு கிழக்கில் ஆயுதப்படையினரை பலப்படுத்தும் விஸ்தரிப்பு நடவடிக்கையினாலும், பேச்சுவார்த்தையின் போது ஒப்புக்கொண்ட விவகாரங்களை சிறிலங்கா அரசாங்கம் மீறியமையாலேயுமே யுத்தநிறுத்தம் முறிவடைந்தது. இதனை முதலில் திரு. தொண்டமான் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

கடந்த கால அனுபவம் பற்றிக் குறிப்பிடும் நீண்ட அனுபவமுடையவரான திரு. தொண்டமான் இராணுவ நடவடிக்கை தொடர்ந்து கொண்டே இருப்பதனால் ஏற்படும் விளைவுகளையும் கடந்த கால அனுபவத்தின் ஊடாகப் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த கால இராணுவ நடவடிக்கையினால் ஆயிரக்கணக்கான அப்பாவித்தமிழ் மக்கள்

# நியூயோர்க்கில் கொலம்பிய விசேட கொலையாளி கைது

(நியூயோர்க்)

ஐ.நா. பொதுச் சபைக்கூட்டத்தில் பங்கு பற்றி வரும் உலகத் தலைவர் ஒருவரைக் கொலை செய்யும் பொருட்டு நியூயோர்க்வந்துள்ள கொலம்பியா மெடலின் கார்டெலைச் சேர்ந்த விசேட பயிற்சி பெற்ற கொலையாளியை அமெரிக்க ஏஜெண்டுகள் கைது செய்துள்ளனர்.

டன்டெனி முனோஸ்மொஸ்குவெரா என்ற 24 வயதான இந்த நபர் உலகின் சிறப்புக் கொலையாளிகளில் ஒருவர் என்றும், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் உட்பட நூற்றுக்கணக்கான சர்வதேச தலைவர்கள் கலந்துகொள்ளவிருக்கும் சமயத்தில் இந்த நபரும் நியூயோர்க் வந்திருக்கிறார் என்றும் அமெரிக்க உளவு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர் யாரைக் கொலை செய்ய இருந்தார் என்பது தெரியாவிடினும் கொலம்பியா ஜனாதிபதி கவிரியா இவரது முக்கிய இலக்காக இருக்கலாம் என அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## அணு ஆயுதக் குறைப்பு

# உச்சி மாநாட்டைக்கூட்ட ஐரோ. நாடுகள் முடிவு

(பரிஸ்)

அமெரிக்காவின் அணு ஆயுதங்களை பெருமளவு குறைப்பது என்ற அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் அறிவிப்பை அடுத்து ஐரோப்பாவில் அணு ஆயுதங்களை தயாரிக்கும் நான்கு நாடுகள் தங்களது ஆயுதங்களை குறைக்கப் பேசுவதாக அறிவித்துள்ளன.

இது தொடர்பாக உச்சி மாநாடொன்றை இந்த நான்கு நாடுகளும் வெகு விரைவில் நடத்தப் போவதாக பிரான்சிய ஜனாதிபதி மித்ரோன் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரித்தானிய மற்றும் பிரான்ஸும் இத்தகைய மாநாடு ஒன்றை நடத்தும் என்றும் மித்ரோன் தெரிவித்தார்.

# நடிகை பேபி ஷாலினியிடம் கப்பம் கேட்டவர் கைது

குழந்தை நட்சத்திரமான ஷாலினியிடம் புலிகளின் பெயரால் ஒரு இலட்ச ரூபா கப்பமாகப் பணம் கோரி அநாமதேயக் கடிதம் எழுதிய மோகன்ராஜ் என்ற 19 வயது வாலிபர் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# பிரிட்டனிலேயே உலகில் பாதுகாப்பான வீதிகள்

(லண்டன்)

உலகிலேயே மிகப் பாதுகாப்பான வீதிகளை பிரித்தானியா கொண்டிருக்கிறது என்று பிரித்தானிய போக்குவரத்து அமைச்சர் மால்கம் ரிப்கின்ட் தெரிவித்துள்ளார்.

கடந்த யூன் மாதம் வரையிலான ஒருவருட காலத்தில் பிரித்தானியாவின் வீதி விபத்துகளில் 4655 பேர் மாண்டிருப்பதாகவும் அதற்கு முன்னைய 12 மாதங்களில் 5487 பேர் மாண்டனர் என்றும்,

இந்த உயிர் இழப்பு ஒப்பீட்டளவில் மற்றைய நாடுகளை விட குறைவானது என்றும் 1948 ஆம் ஆண்டு முதல் பிரித்தானியாவில் வீதி விபத்துக்கள் குறைந்திருப்பதால் உலகிலேயே பாதுகாப்பான வீதிகளை கொண்டிருக்கிறது என்று கூற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

1948 ஆம் ஆண்டு பிரித்தானியாவில் 37 லட்சம் கார்கள் இருந்தன இப்போது 2 கோடியே 47 லட்சம் கார்கள் உள்ளன.

பிரித்தானியாவில் 1,00,000 பேருக்கு 9.7 சத விகிதமே வீதிமரணங்கள் ஏற்படுகின்றன. போர்த்துக்கலில் 31 சத விகிதமாகவும், பிரான்சில் 20 சத விகிதமாகவும் இத்தாலியில் 12 சத விகிதமாகவும் உள்ளன.

# இமெல்டா பிலிப்பைன்ஸ் திரும்பினால் கைதாவார்

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி நடத்தும்

# மாவீரர் தினப் போட்டிகள்

21-11-91 தொடக்கம் 27-11-91 வரையில் நடைபெற இருக்கும் மாவீரர் தினத்தை ஒட்டி நடாத்தப்பட இருக்கும் கலைகலாசாரப் போட்டிகளில் எழுத்தாளர்கள் கலைஞர்கள் மற்றும் இத்துறையில் ஆர்வம் மிக்கோர் மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி, மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப் போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெற உள்ளன.

1. கட்டுரை 2. நாவல் 3. சிறுகதை
4. கவிதை 5. சுவரொட்டி

இவற்றை ஆக்க விரும்புவோர் ஆக்கங்களை 25-10-91 க்கு முன்பு எமது பிரதேச மாவட்ட காரியாலயங்களிலும் அல்லது பத்திரிகைக் காரியாலயங்களில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றோம்.

★ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறும்.

★ தமிழீழத்தின் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப் போட்டிகளில் ஆர்வம் ஆற்றல் மிக்க அனைவரும் கலந்துகொள்ளலாம்.

## போட்டிகளுக்கான விதிமுறைகள்

தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொள்ளக்கூடிய இப்போட்டிகளில் படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப்போரை அடிப்படையாகக் கொண்டும் அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும் சமகாலத்தில் எமது மக்களின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்புப் போரின் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் உணர்வுகளையும் இதயதாகத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் அதே போல சுவரொட்டிகளின் கருப்பொருள்கள் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் நன்று. இலக்கியப் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.

சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்கு குறையாமலும் கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சுவரொட்டிகள் யாவும் ஆட்போட்டில் 60 சென்ரிமீற்றர் X 40 சென்ரிமீற்றர் அளவு கொண்டதாக வர்ணப் படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகிக்கலாம்.) கறுப்பு வெள்ளைப் படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர்களால் அல்லது வகுப்பு ஆசிரியர்களால் அவர்களுடைய சொந்தப் படைப்பு என உறுதிப்படுத்தப்பட வேண்டும். போட்டிக்கான கட்டுரைகள் 3000 - 5000 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் நன்று. போட்டிகளின் தீர்ப்பு தகுதி வாய்ந்த நடுவர் குழுவினால் எடுக்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

**மாணவர்களே!**

**போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்**

வைத்திருந்தனர். அக்கடிதத்தில் ஒரு உருப்படியான தீர்வுத்திட்டத்தைநோக்கிய கருத்துப்பரிமாற்றங்களுக்கும், விளக்கங்களுக்கும் கடிதமூலம் தொடர்புவைத்துக்கொள்வது நடைமுறைக்குச் சிரமமானது அத்துடன் சமாதானப் பேச்சுக்கள் தொடர இது உகந்த வழிமுறையும் அல்ல, நேரடியாக சந்தித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதே சிறந்த வழிமுறையாகும் எனக் குறிப்பிட்டு பேச்சுவார்த்தை நடத்த யாழ்ப்பாணம் வருமாறும் அழைப்பு விடுத்திருந்தனர்.

ஆனால், அமைச்சர் தொண்டமான் புலிகளின் இக்கருத்தினைக் கருத்திற் கொள்ளாதது போல் மீண்டும் தீர்வுத்திட்டத்தையும், கடிதப்பரிமாற்றங்களையும் கடித மூலம் தெரிவிக்குமாறு கோரியுள்ளமை அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டம் பற்றிய சந்தேகத்திற்குரிய கேள்வியையே எழுப்புகின்றது

மேலும், யுத்த நிறுத்தத்தைப் பயன்படுத்தி போராளிகள் தம்மைப் பலப்படுத்திக் கொண்டனர் என்று முன்னர் குற்றம் சாட்டப்பட்டது. இந்த அனுபவத்தை அடுத்தே யுத்த நிறுத்தம் இல்லாமலே பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று திரு. தொண்டமான் கொழும்பின் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறாயின், சிறிலங்கா அரசாங்கமும் இராணுவத் தரப்பும் கூறுவது போன்றே ஓர் இராணுவ அழுத்தத் துடன் கூடிய ஒரு திணிப்பையா தொண்டமான் விரும்புகிறார் என்ற எண்ணமும் ஏற்படுகின்றது

கடந்த யுத்த நிறுத்த காலத்தில் விடுதலைப்புலிகள் தம்மைப் பலப்படுத்திக் கொண்டதனால் யுத்தநிறுத்தம் முறிவடைந்து போர் ஆரம்பிக்கவில்லை. சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகளினாலும்; வடக்கு கிழக்கில் ஆயுதப்படையினரை பலப்படுத்தும் விஸ்தரிப்பு நடவடிக்கையினாலும், பேச்சுவார்த்தையின் போது ஒப்புக்கொண்ட விவகாரங்களை சிறிலங்கா அரசாங்கம் மீறியதனாலேயே யுத்தநிறுத்தம் முறிவடைந்தது. இதனை முதலில் திரு. தொண்டமான் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

கடந்த கால அனுபவம் பற்றிக் குறிப்பிடும் நீண்ட அனுபவமுடையவரான திரு. தொண்டமான் இராணுவ நடவடிக்கை தொடர்ந்து கொண்டே இருப்பதனால் ஏற்படும் விளைவுகளையும் கடந்த கால அனுபவத்தின் ஊடாகப் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த கால இராணுவ நடவடிக்கையினால் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். கோடிக்கணக்கான சொத்துக்கள், தொழில்துறைகள், பொருளாதார நடவடிக்கைகள் அழிக்கப்பட்டன. அவற்றிற்கும் மேலாக கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் தமது தாயக மண்ணில் இருந்து விரட்டப்பட்டார்கள். அதன் தொடராக மணலாற்றுப் பிரதேசத்திலும் பெரும் ஆக்கிரமிப்புப் போர் ஒன்று நடைபெற்று தற் பொழுதுதான் முடிவடைந்துள்ளது.

மறுவளமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்களில் சிங்களவர் குடியேற்றப்பட்டனர். தமிழரின் நிலங்களும், உடைமைகளும் குடியேற்ற வாசிகளுக்கு வழங்கப்பட்டன. குடியேற்றவாசிகளுக்கு ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன

இந்நிலையில், யுத்தத்தை ஒருபுறத்தில் நடத்திக் கொண்டு ஒருபுறத்தில் பேசுவது என்பது சிறிலங்கா அரசாங்கத்தின் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு [illegible]பதாகவே அமையும்.

திரு. தொண்டமானின், சிறிலங்கா அரசாங்கமோ, அன்றி எதிர்க்கட்சிகளோ ஏற்றுக் கொள்ளாத சமரசத் திட்ட அடிப்படையில் யுத்த நிறுத்தம் இன்றி பேச்சுவார்த்தை நடைபெறின் மீண்டும் மேற்கூறிய விளைவுகளே ஏற்படும். அத்தோடு இராணுவத்திற்கு கால அவகாசத்தையும், தமிழ் மக்களின் கவனத்தையும் திருப்பும் ஒரு நடவடிக்கையாகவே அவை அமையும்.

இவற்றைத் திரு. தொண்டமான் முதலில் விளங்கிக் கொண்டு பேச்சுவார்த்தை மூலம் ஒரு சமரசத் திட்டம் உருவாக வேண்டுமானால் முதலில் பேச்சுவார்த்தைக்குரிய சூழ்நிலையை உருவாக்குவதற்குரிய அரசியல் முயற்சிகளையும், தான் முன்வைத்த தீர்விற்குரிய திட்டத்திற்கு அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் அறிந்து கொள்ள வேண்டும். அது அரசியல் தீர்வைப் பற்றி தமிழ் மக்கள் தமது நிலைப் பாட்டை வெளிக் காட்டவும், அதன் மூலம் புலிகள் தமது செயற்பாட்டை அறியத்தரவும் ஏதுவாக இருக்கும்.

- சைத்தியா

நாடுகள் தங்களது ஆயுதங்களை குறைக்கப் போவதாக அறிவித்துள்ளன.

இது தொடர்பாக ஊசி நாவிய மற்றும் பிரான்ஸும் இத்தகைய மாநாடு ஒன்றை நடத்தும் என்றும் மித்ரோன் தெரிவித்தார்.

## நடிகை பேபி ஷாலினியிடம் கப்பம் கேட்டவர் கைது

குழந்தை நட்சத்திரமான ஷாலினியிடம் புலிகளின் பெயரால் ஒரு இலட்ச ரூபா கப்பமாகப் பணம் கோரி அநாமதேயக் கடிதம் எழுதிய மோகன்ராஜ் என்ற 19 வயது வாலிபர் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

## பிரிட்டனிலேயே உலகில் பாதுகாப்பான வீதிகள்

(லண்டன்)

உலகிலேயேமிகப் பாதுகாப்பான வீதிகளை பிரித்தானியா கொண்டிருக்கிறது என்று பிரித்தானிய போக்குவரத்து அமைச்சர் மால்கம் ரிப்கின்ட் தெரிவித்துள்ளார்.

கடந்த யூன் மாதம் வரையிலான ஒருவருட காலத்தில் பிரித்தானியாவின் வீதி விபத்துக்களில் 4655 பேர் மாண்டிருப்பதாகவும் அதற்கு முன்னைய 12 மாதங்களில் 5487 பேர் மாண்டனர் என்றும்,

இந்த உயிர் இழப்பு ஒப்பீட்டளவில் மற்றைய நாடுகளை விட குறைவானது என்றும் 1948 ஆம் ஆண்டு முதல் பிரித்தானியாவில் வீதி விபத்துக்கள் குறைந்திருப்பதால் உலகிலேயே பாதுகாப்பான வீதிகளை கொண்டிருக்கிறது என்று கூற முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

1948 ஆம் ஆண்டு பிரித்தானியாவில் 27 லட்சம் கார்கள் இருந்தன இப்போது 2 கோடியே 47 லட்சம் கார்கள் உள்ளன

பிரித்தானியாவில் 1,00,000 பேருக்கு 9 7 சத விகிதமே விதிமரணங்கள் ஏற்படுகின்றன. போர்த்துக்கலில் 31 சத விகிதமாகவும், பிரான்சில் 20 சத விகிதமாகவும் இத்தாலியில் 12 சத விகிதமாகவும் உள்ளன.

## இமெல்டா பிலிப்பைன்ஸ் திரும்பினால் கைதாவார்

(மணிலா)

மார்க்கோஸின் சடலத்துடன் மணிலா செல்லும் அவரது மனைவி இமெல்டா மார்க்கோஸ் கைதுசெய்யப்படுவார்.

இமெல்டா பிலிப்பைன்ஸுக்குப் போவதற்குக் கொடுத்த காலக்கெடு திகதி அடுத்த மாதத்துடன் காலாவதியாவதால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தாம் பிலிப்பைன்ஸ் திரும்பப் போவதாக அவர் கூறியுள்ளார். பிலிப்பைன்ஸுக்குவரும்போது பல மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்த தமது கணவர் சர்வாதிகாரி மார்க்கோஸின் உடலையும் எடுத்து வரப்போவதாகவும் கூறியுள்ளார்.

இதற்கிடையில் இமெல்டாவுக்கு எதிராகப் பிலிப்பைன்ஸ் அரசு ஏராளமான குற்றச்சாட்டுகளை அந்த நாட்டு நீதிமன்றத்தில் பதிவு செய்துள்ளது. லஞ்சம், ஊழல், கறுப்புப் பணம் உட்பட ஏராளமான குற்றச்சாட்டுகள் இவரது பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதாலேயே இமெல்டா மணிலாவில் வந்திறங்கியதுமே பொலிஸாரால் கைதுசெய்யப்படுவாரென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

1986 ஆம் ஆண்டு பிலிப்பைன்ஸில் இடம்பெற்ற 'மக்கள் சக்தி' எனும்புரட்சியினால் சர்வாதிகாரி மார்க்கோஸும் அவரது மனைவி இமெல்டா மார்க்கோஸும் துரத்தியடிக்கப்பட்டனர்.

## தொல்லை நீங்கும் வரை இராணுவம் விலகாது

(டில்லி)

அசாமில் உல்பா தீவிரவாதிகளின் தொல்லைகள் தீர்க்கப்படும் வரை இராணுவத்தை விலக்கிக் கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அசாம் முதலமைச்சர் ஹிதேஷ்வ சைத்தியா தெரிவித்துள்ளார்.

பி.ரி.ஐ நிருபருக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

வழங்கப்படவுள்ள இப் போட்டிகளில் ஆர்வம் ஆற்றல் மிக்க அனைவரும் கலந்துகொள்ளலாம்.

### போட்டிகளுக்கான விதிமுறைகள்

தமிழீழ மக்கள் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய இப்போட்டிகளில் படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப்போரை அடிப்படையாகக் கொண்டும் அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும் சமகாலத்தில் எமது மக்களின் பிரச்சினையை அடிப்படையாகக் கொண்ட யதார்த்த தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண் மீட்பும் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களின் உணர்வுகளையும் இலட்சியத்தையும் பிரதிபலிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் அதே போல் கலைப் போட்டிகளின் கருப்பொருள்கள் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் நன்று. இலக்கியப் படைப்புக்கள் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டோ அல்லது தட்டச்சு செய்யப்பட்டோ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்பட வேண்டும்.

சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்கு குறையாமலும் கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். சுவரொட்டிகள் யாவும் ஆட்போட்டில் 60 சென்ரிமீற்றர் X 40 சென்ரி மீற்றர் அளவு கொண்டதாக வர்ணப் படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகிக்கலாம்.) கறுப்பு வெள்ளைப் படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர்களால் அல்லது வகுப்பு ஆசிரியர்களால் அவர்களுடைய சொந்தப் படைப்பு என உறுதிப்படுத்தப்பட வேண்டும். போட்டிக்கான கட்டுரைகள் 3000 - 5000 சொற்களுக்கு மேற்படாமல் இருத்தல் நன்று போட்டிகளின் தீர்ப்பு தகுதி வாய்ந்த நடுவர் குழுவினால் எடுக்கப்படும். நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

### மாணவர்களே!

### போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்

மாணவர்களுக்கான போட்டிகள், சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் ஆகிய விடயங்களில் நடைபெறும். இவை மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருக்கும் ஓவியங்கள் 18X12 அளவு கொண்டதாக இருக்க வேண்டும். கட்டுரைகள் கீழ்வரும் அம்சங்களைக்கொண்டதாக இருக்க வேண்டும்

1. விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்
2. தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி
3. தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்.
4. இன்றைய சூழ்நிலையில் மாணவர்களது சமூகப்பணிகள்
5. போராடுவதற்காகக் கற்போம்.

மேற்கண்ட தலைப்புகளில் கட்டுரைகள் 2,500 சொற்களுக்கு மேற்படாமல் வரைய வேண்டும். மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, ஆகிய பிரிவுகளாக நடைபெறும்.

1. 15 வயதுக்கு உட்பட்டோர் கீழ்ப்பிரிவு
2. 15 — 17 வயதுக்கு இடைப்பட்டோர் மத்திய பிரிவு
3. 17 வயதுக்கு மேற்பட்டோர் மேற்பிரிவு

**ஒவ்வொரு பிரிவினருக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்**

# அணு ஆயுதம் குறைப்பினும் படை பலம் பேணப்படும்

## - டிக்ஸ் ஜெனி

(வாஷிங்டன்)

அமெரிக்கா அணு ஆயுதங்களை குறைத்துள்ள போதிலும், போதுமான படைபலத்தை பராமரித்து வரும் என அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் டிக்ஸ் ஜெனி அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமெரிக்க தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

வளைகுடாப் போரிபோன்ற ஒரு நிலைமையை வெல்லக்கூடிய அளவிற்கு போதுமான படைபலத்தை அமெரிக்கா கொண்டிருக்கிறது என்றும்; இதனை யொட்டி அமெரிக்கா தனது படைகளை பராமரிக்கும் என்றும்,

பிராந்திய பூசலை எதிர்த்து சமாளிக்க வேண்டிய தேவைடிான் இந்தப் படையின் தளவை நிர்ணயிப்பதற்கான அடிப்படைத் தேவையென்றும் டிக்ஸ் ஜெனி தனது பேட்டியில் தெரிவித்தார்.

## உதவியோருக்கு நன்றி

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியால் நடாத்தப்பட்ட தியாகி திலீபன்நினைவு தடகள விழாவின் வட்டவை மட்டப்போட்டிகளிலும் மாவட்டப்போட்டிகளிலும் சகல வழிகளில் உதவிகள், ஒத்தாசை புரிந்து போட்டிகள் சிறப்பாகநடைபெற ஒத்துழைத்த சகலருக்கும் விழா அமைப்புக் குழுவினர் தமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.

### தியாகி திலீபன் நினைவாக

## வவுனியா மாவட்டத்தில் விளையாட்டுப் போட்டிகள்

தியாகி திலீபனின் நினைவாக எதிர்வரும் 4 ஆம் திகதியும், 5 ஆம் திகதியும் வவுனியாவில் விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

கடந்த 20 ஆம் திகதி நடைபெறவிருந்த இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் பின்னர் ஒத்திவைக்கப்பட்டிருந்தன.

எதிர்வரும் 4 ஆம் திகதி ஓமந்தையிலிருந்து ஆரம்பமாகும் சைக்கிள் ஓட்டப் போட்டி இந்நிகழ்ச்சியில் முக்கியமானது.

5 ஆம்திகதி இரணை இலுப்பைக்குளம் பகுதியில் தடகள விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். (தி)

## ஆசிரியர்தின விழா யாழ். மாவட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்வித் திணைக்களத்தில் நேற்று ஆசிரியர் தினக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

நேற்று செய்தி பரிமாறும் மரதன்ஓட்டப்போட்டி நடைபெற்றதைத் தொடர்ந்து அனைத்து ஆசிரியர்களும் யாழ். கல்வித் திணைக்கள மைதானத்தில் பாண்ட் வாத்தியங்களுடன் உலா வந்து ஆசிரிய சங்கக் கொடியை ஏற்றிவைத்தனர். (லோ)

### கிளிநொச்சியில்

## ஆசிரியர்தினத்தையொட்டி விளையாட்டுப் போட்டி

(நமது நிருபர்)

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி கல்வித் திணைக்கள ஆதரவில் கிளிநொச்சி கொத்தணி, உருத்திரபுரம் கொத்தணி ஆசிரியர்களுக்கு இடையில் விளையாட்டுப் போட்டிகள் 29-09-1991 ஞாயிற்றுக் கிழமை மேற்படி வித்தியாலயங்களின் மைதானங்களில் இடம் பெற்றன. தாச்சி வலைபந்தாட்டம், எறிபந்தாட்டம் ஆகியவற்றில் கிளிநொச்சி கொத்தணி வெற்றி பெற்றது. உதைபந்தாட்டத்தில் ஒரு கோலைப் போட்டு உருத்திரபுரம் கொத்தணி வெற்றி பெற்றது.

### ஊனமுற்றோர்

## புனர்வாழ்வு அன்பளிப்பு பத்திரம் விற்பனை

யாழ்.ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கத்தினால் அன்பளிப்பு பத்திரங்கள் விற்கப்படுகின்றன. அவற்றை பொது மக்கள் பெற்று ஊனமுற்றோருக்கு உங்கள் அன்புக் கரங்களை நீட்டுமாறு சங்கம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறது எனச் சங்கப் பொருளாளர் திருமதி இ. சிவப்பிரகாசம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

## மகாகவியின் மேடை நாடகம்

## தீவகத்தில் ஆசிரியர் தினவிழா

(புங்குடுதீவு)

வேலணைக் கல்விக் கோட்டம் உலக ஆசிரியர் தினத்தை நாளை மறுதினம் கொண்டாடவுள்ளது.

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் நாளை மறுதினம் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த வைபவத்துக்கு வேலணைக் கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் சி. புலேந்திரன் தலைமை வகிப்பார்.

## கடிகாரத்தை பெறவும்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் பாண்வழங்கும் காரியாலயத்தில் பெண்களுக்கான கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கடிகாரத்தின் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டி அதனைபெற்றுக்கொள்ளலாம்

### வடபகுதி

சர்வதேச வங்கியியல் விதிகளின் படி வேண்டுமென்றே பாவனையாளருக்கு வழங்க வேண்டிய பணத்தை திருப்பிக் கொடுக்காமல் இருப்பது பாரதூரமான குற்றம் என்பது குறிப்பிடத் தக்கது. இந்த நிலையில் பாவனையாளர்கள் வழக்குத் தொடர்ந்திருப்பது நியாயமானது என்பதால் இந்த பாவனையாளர்களின் மேற்படி நடவடிக்கைகளுக்கு வங்கிகளின் தலைமை அலுவலகங்கள் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

யாழ். மாவட்டத்தில் இயங்கும் வங்கி முகாமையாளர்களுக்கு கிடைத்த வழக்குத் தொடரப்போவதாக அறிப்

## சிதம்பரத்திற்கு எதிராக 'போஸ்டர்' யுத்தம்

(சென்னை)

மத்திய அமைச்சர் ப. சிதம்பரத்திற்கு எதிராக நடந்த கறுப்புக்கொடி போராட்டங்கள் நின்று போனாலும் சிவகங்கைத் தொகுதியில் மத்திய அமைச்சருக்கு எதிரான 'போஸ்டர்' யுத்தங்கள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

'நஞ்சையும் புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சையைப் பஞ்சமாக்கிய கைக்கூலி'' என்றும் 'காணவில்லை' - பெயர் ப. சிதம்பரம், பதவி-எம்.பி, கர்நாடக அரசின் விசேட அழைப்பின் பேரில் பெங்களூர் சென்றவரைக் காணவில்லை, கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு சன்மானம் உண்டு.

இவ்வாறாக சிவகங்கை தாலுகா விவசாயிகள் போஸ்டர் அடித்து சிவகங்கை நகர் முழுவதும் ஒட்டியுள்ளனர்.

## தீவிபத்தில் 10 சிறுவர்கள் உட்பட 15 பேர் பலி

(டில்லி)

இந்தியா டில்லிநகர தென் பகுதியில் உள்ள சேரிப்புறத்தில் தீ பரவியதால் பத்து சிறுவர்கள் உட்பட பதினைந்து பேர் பலியாயினர். மேலும் பலர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

சுமார் ஆயிரக்கணக்கான ஓலைக்குடிசைகளை கொண்ட இந்த சேரியில் இரவு வேளையில் திடீரென ஏற்பட்ட தீ விபத்து சுமார் முந்நூற்றுக்கும் மேற்பட்ட குடிசைகளை எரித்து சாம்பராக்கி விட்டதாக செய்திகள் கூறுகின்றன.

திடீரென டில்லி நகரசேரிப் பகுதி எங்கும் ஒரே புகை மண்டலமாக ஆகிவிட்டதாகவும் இந்த புகை மண்டலத்தினுள் இருந்து எத்தப்பக்கம் தப்பி ஓடுவது என்று தெரியாத நிலையில் தத்தளித்து ஏராளமானோர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தீவிபத்து நடந்த இடத்தில் மீட்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் உடல்கள் சாம்பராகிய வீடுகளுக்குள் கண்டெடுக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கிழக்கு ஜேர்மனியில்

## அகதிமுகாம்கள் மீது குண்டுத் தாக்குதல்கள்

(பெர்ன்)

கிழக்கு ஜேர்மனியில் உள்ள அகதிமுகாம்கள் மீது தொடர்ந்தும் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக ஜேர்மனியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டு அகதிகளும், தொழிலாளர்களும் தங்கியிருக்கும் விடுதிகள் மீது வலதுசாரி ஜேர்மனியக் குழுக்கள் பெற்றோல் குண்டுயும், எகளை கற்களையும் வீசி தாக்குதலை நடாத்தி வருகின்றனர்.

இரண்டாவது வாரமாக இத்தாக்குதல் இடம்பெற்று வருகின்றது என்றும், தொடர்ந்து அகதிமுகாம்களைச் சுற்றித் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜேர்மனியப்பொலிஸார் தெரிவித்தனர்.

## ஐரோப்பிய குடும்பத்தினுள் கருத்து முரண்பாடு

(லண்டன்)

ஐரோப்பிய குடும்ப நாடுகளுக்கிடையே ஒரே வெளியுறவுகொள்கை ஒரே நீதித்துறை என்பவற்றை கொண்டுவரலாம் என்று ஒல்லாந்து வழங்கிய ஆலோசனைகளை இங்கிலாந்தும் அதன் தோழமை நாடுகளும் எதிர்த்து வருகின்றன.

இந்த எதிர்ப்பை தொடர்ந்து ஐரோப்பிய குடும்பத்தில் பிளவு நிலையும் கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டுள்ளன.

## அன்னை தெரேசாவுடன் சோனியா இணைவாரா?

(டில்லி)

சோனியா காந்தி அன்னை தெரேசாவுடன்சேர்ந்துகொள்வாரா என்ற கேள்வியை 'ரிபியூன்' பத்திரிகை எழுப்பியுள்ளது.

இந்தியப் பத்திரிகையான ரிபியூன் ராஜீவ் காந்தியின் மனைவியாகிய சோனியா அன்னை தெரேசாவுடன் சேர்ந்து பொதுப்பணியை ஆற்றப்போவதாக தெரிவித்துள்ளது.

அன்னை தெரேசாவும் இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவிடம் தலைமை

(நியூயோர்க்)

ஐ. நா. சபைக்கான இந்தியத் தூதர் சி. ஆர். கரேக்கான் தலைமையில் இந்தியா இன்று ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ளது

மிக முக்கியமான பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிய விவாதங்கள் இன்று இந்தியா தலைமையில் கூடவுள்ள சபையில் வரலாம் என்றும்,

இத்தகையதொரு நெருக்கடியான நேரத்தில் இந்தியா தலைமை தாங்குகின்றது என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

ஐ. நா. சபைக்கான தலைமைச் செயலாளரை தேர்ந்தெடுப்பதில் யூகோசிலாவியப் பிரச்சினை, சைப்பிரஸ் பிரச்சினை போன்றவை அடங்குகின்றன

ஒவ்வொரு மாதமும் இச்சபை கூடும்போது சபைத் தலைவர் பதவி உறுப்பு நாடுகளுக்கிடையே வரிசையாக அடுத்தடுத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## முத்திரைகள் வந்தன

யாழ். மாவட்டத்துக்கான உணவு முத்திரைகள் யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்தன.

கடந்த பல மாதங்களாக அனுப்பி வைக்கப்படாதிருந்த உணவு முத்திரைகளும் பாடசாலை மாணவர்களுக்கான உணவு முத்திரைகளுமே வந்துள்ளன.

# ஆசிரியர்தின விழா யாழ். மாவட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கல்வித் திணைக்களத்தில் நேற்று ஆசிரியர் தினக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

நேற்று செய்தி பரிமாறும் மரதன்ஓட்டப்போட்டி நடைபெற்றதைத் தொடர்ந்து அனைத்து ஆசிரியர்களும் யாழ். கல்வித் திணைக்கள மைதானத்தில் பாண்ட் வாத்தியங்களுடன் உலா வந்து ஆசிரிய சங்கக் கொடியை ஏற்றிவைத்தனர். (லோ)

## கிளிநொச்சியில்

# ஆசிரியர்தினத்தையொட்டி விளையாட்டுப் போட்டி

(நமது நிருபர்)

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சி கல்வித் திணைக்கள ஆதரவின் கிளிநொச்சி கொத்தணி, உருத்திரபுரம் கொத்தணி ஆசிரியர்களுக்கு இடையில் விளையாட்டுப் போட்டிகள் 29-09-1991 ஞாயிற்றுக்கிழமை மேற்படி வித்தியாலயங்களின் மைதானங்களில் இடம் பெற்றன. தாச்சி வலைபந்தாட்டம், எறிபந்தாட்டம் ஆகியவற்றில் கிளிநொச்சி கொத்தணி வெற்றி பெற்றது. உதைபந்தாட்டத்தில் ஒரு கோலைப் போட்டு உருத்திரபுரம் கொத்தணி வெற்றி பெற்றது.

## ஊனமுற்றோர்

# புனர்வாழ்வு அன்பளிப்பு பத்திரம் விற்பனை

யாழ். ஊனமுற்றோர் புனர்வாழ்வு சங்கத்தினால் அன்பளிப்பு பத்திரங்கள் விற்கப்படுகின்றன. அவற்றை பொது மக்கள் பெற்று ஊனமுற்றோருக்கு உங்கள் அன்புக் கரங்களை நீட்டுமாறு சங்கம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறது எனச் சங்கப் பொருளாளர் திருமதி இ. சிவப்பிரகாசம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

பேச்சுக்கு

அது சாத்தியமாகப் போவதில்லை என்றும் இப்பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

மேலும் இன்றைய அரசியல் சூழ்நிலையில் பல்வேறு எதிர்க்கட்சிகளும் சமரசத்தீர்விற்கு குந்தகம் விளைவிக்கும் என்பதால் பேச்சுவார்த்தையில் அரசாங்கம் தற்பொழுது கலந்து கொள்ள முடியாது என்ற ரீதியில் அமைச்சர் தொண்டமான் பேசியிருப்பது குறித்தும் அவர் விசனம் தெரிவித்தார்.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்கு இரகசியத் தீர்வு எதையும்காணமுடியாது எனக் குறிப்பிட்ட அப்பேச்சாளர், கடந்தகாலத்தில் எதிர்க்கட்சிகள் எதிர்த்தன என்பதற்காக தமிழ்த் தலைவர்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை அரசாங்கங்கள் கிழித்தெறிந்ததை நினைவு கூர்ந்ததோடு, அமைச்சர் தொண்டமானின் இக் கருத்து அதனை நினைவுபடுத்துவதாகவும் தெரிவித்தார்.

# மகாகவியின் மேடை நாடகம்

பட்டப்படிப்புக்கள் கல்லூரி தயாரித்து வழங்கும் மகாகவியின் மேடை நாடகம் வரும் ஞாயிற்றுக் கிழமை (6,10.91) பிற்பகல் 2 30 மணிக்கு யாழ். இந்துக்கல் லூரி குமாரசாமி மண்டபத்தில்மேடையேறவுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் சிட்டு அவர்கள் கலந்து சிறப்புரை நிகழ்த்துவார்.

காரியாலயப்

களுக்கே 1-9-91 முதல் வேறெந்தப் பிரயாணப் படியும் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கோட்டக் கல்வி அலுவலகத்திலிருந்து மாவட்டக் கல்வித் திணைக்களத்துக்குச் செய்யும் பிரயாணங்கள் கூடிய வரை ஒரே நாளிலேயே செய்யப்பட வேண்டும் எனவும், அடிக்கடி ஊழியர்களின் வெவ்வேறு தேவைகளுக்காக அனுப்புவதைக் கட்டுப்படுத்துமாறும் அவர்பணித்துள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த வைபவத்துக்கு வேலணைக் கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் சி. புலேந்திரன் தலைமை வகிப்பார்.

# கடிகாரத்தை பெறவும்

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் பால்வழங்கும் காரியாலயத்தில் பெண்களுக்கான கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கடிகாரத்தின் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டி அதனைபெற்றுக்கொள்ளலாம்

வடபகுதி

சர்வதேச வங்கியியல் விதிகளின் படி வேண்டுமென்றே பாவனையாளருக்கு வழங்க வேண்டிய பணத்தை திருப்பிக் கொடுக்காமல் இருப்பது பாரதூரமான குற்றம் என்பது குறிப்பிடத் தக்கது. இந்த நிலையில் பாவனையாளர்கள் வழக்குத் தொடர்ந்திருப்பது நியாயமானது என்பதால் இந்த பாவனையாளர்களின் மேற்படி நடவடிக்கைகளுக்கு வங்கிகளின் தலைமை அலுவலகங்கள் முகம் கொடுக்க வேண்டியநிலை ஏற்பட்டிருக்கின்றது

யாழ். மாவட்டத்தில் இயங்கும் வங்கி முகாமையாளர்களுக்கு கிடைத்த வழக்குத் தொடரப் போவதாக அனுப்பப்பட்ட பாவனையாளர்களின் கடிதங்கள் வங்கிகளின் தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன வழக்குத் தொடரும் நடவடிக்கையில் மேலும் பல பாவனையாளர்கள் இறங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

மண்டூரில்

மீல் இருந்து ரோந்து நடவடிக்கைக்காக சென்ற இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். இத்தாக்குதலில் இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை

மேற்படி பகுதிகள் அண்மையில் அம்பாறை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு

பெறவிருக்கிறது.

இதில் சகல விளையாட்டு உத்தியோகத்தர்கள், இளைஞர் சேவை அதிகாரிகள், வட்டவை விளையாட்டுப் பொறுப்பாளர்கள் மற்றும் விளையாட்டுக் குழுவின் செயற்குழுவினர் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

# அகதிமுகாம்கள் மீது குண்டுத் தாக்குதல்கள்

(பேர்ள்)

கிழக்கு ஜேர்மனியில் உள்ள அகதிமுகாம்கள் மீது தொடர்ந்தும் குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற்று வருவதாக ஜேர்மனியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டு அகதிகளும், தொழிலாளர்களும் தங்கியிருக்கும் விடுதிகள் மீது வலதுசாரி ஜேர்மனியக் குழுக்கள் பெற்றோல் குண்டும், எகளை கற்களையும் வீசி தாக்குதலை நடாத்தி வருகின்றனர்.

இரண்டாவது வாரமாக இத்தாக்குதல் இடம் பெற்று வருகின்றது என்றும், தொடர்ந்து அகதிமுகாம்களைச் சுற்றித் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜேர்மனியப்பொலிஸார் தெரிவித்தனர்.

# ஐரோப்பிய குடும்பத்தினுள் கருத்து முரண்பாடு

(லண்டன்)

ஐரோப்பிய குடும்ப நாடுகளுக்கிடையே ஒரே வெளியுறவுகொள்கை ஒரே நீதித்துறை என்பவற்றை கொண்டுவரலாம் என்று ஒல்லாந்து வழங்கிய ஆலோசனைகளை இங்கிலாந்தும் அதன் தோழமை நாடுகளும் எதிர்த்து வருகின்றன.

இந்த எதிர்ப்பை தொடர்ந்து ஐரோப்பிய குடும்பத்தில் பிளவு நிலையும் கருத்து வேறுபாடுகளும் ஏற்பட்டுள்ளன.

# அன்னை தெரேசாவுடன் சோனியா இணைவாரா?

(டில்லி)

சோனியா காந்தி அன்னை தெரேசாவுடன்சேர்ந்துகொள்வாரா என்ற கேள்வியை 'ரிபியூன்' பத்திரிகை எழுப்பியுள்ளது.

இந்தியப் பத்திரிகையான ரிபியூன் ராஜீவ் காந்தியின் மனைவியாகிய சோனியா அன்னை தெரேசாவுடன் சேர்ந்து பொதுப்பணியை ஆற்றப்போவதாக தெரிவித்துள்ளது.

அன்னை தெரேசாவும் இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# என்னை வீழ்ந்து வணங்க வேண்டாம் -ஜெயலலிதா

(சென்னை)

''எனதுகாலில் வீழ்ந்துவணங்க வேண்டாம்'' என்று தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா சட்டசபை உறுப்பினர்களிடம் கேட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

கடந்தவாரம் சென்னையில் நடைபெற்ற சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான கூட்டமொன்றில் பேசிய ஜெயலலிதா இதனைத் தெரிவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்பு தமிழக சட்டப் பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா உட்பட பல சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஜெயலலிதாவைக் காலில் விழுந்து வணங்கியது தெரிந்ததே.

# சூரிய கலன்கள் மூலம் இ. வங்கிக்கு மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி இலங்கை வங்கி கிளைகளுக்கு ''சூரியக்கலம்'' மூலமாக மின்சார வசதி ஏற்படுத்தப்படவிருக்கின்றது.

இதற்காக கொழும்பில் இருந்து பெரிய அளவிலான சூரியக் கலங்கள் கப்பல் மூலமாக வடபகுதிக்கு எடுத்து வரப்பட இருக்கின்றன.

அண்மையில் கொழும்பு சென்றிருந்த இலங்கை வங்கியின் உயர் அதிகாரிகள் மேற்படி முயற்சியை எடுத்திருந்தனர். தற்பொழுது இலங்கை வங்கி கிளைகளில் ஜெனரேற்றர் மூலமாக மின்சாரம் பெறப்படுகின்றது. இந்த நடைமுறையைத் தொடர்வதற்கு எரிபொருள் தட்டுப்பாடு தடையாக இருப்பதாலேயே மேற்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. (க)

யத் தூதர் சி. ஆர். கரேக்கான் தலைமையில் இந்தியா இன்று ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்கவுள்ளது

மிக முக்கியமான பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிய விவாதங்கள் இன்று இந்தியா தலைமையில் கூடவுள்ள சபையில் வரலாம் என்றும்,

இத்தகையதொரு நெருக்கடியான நேரத்தில் இந்தியா தலைமை தாங்குகின்றது என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவித்துள்ளது.

ஐ. நா. சபைக்கான தலைமைச் செயலாளரை தேர்ந்தெடுப்பதில் யூகோசிலாவியப் பிரச்சினை, சைப்பிரஸ் பிரச்சினை போன்றவை அடங்குகின்றன

ஒவ்வொரு மாதமும் இச்சபை கூடும்போது சபைத் தலைவர் பதவி உறுப்பு நாடுகளுக்கிடையே வரிசையாக அடுத்தடுத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# முத்திரைகள் வந்தன

யாழ். மாவட்டத்துக்கான உணவு முத்திரைகள் யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்தன.

கடந்த பல மாதங்களாக அனுப்பி வைக்கப்படாதிருந்த உணவு முத்திரைகளும் பாடசாலை மாணவர்களுக்கான உணவு முத்திரைகளுமே வந்துள்ளன.

இம்மாதம் முதல் இவை வழங்கப்படும் என செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவை கடந்த வெள்ளிக்கிழமைபருத்தித்துறை இறங்குதுறைக்கு வந்தடைந்த வில்லிவில்லியிலேயே கொண்டு வரப்பட்டன. (ச)

பொலிஸ்

கட்டுப்படுத்த கடந்த இரு நாட்களாக பொலிசார் எடுத்துவரும் நடவடிக்கை பலனளிக்கிறது எனவும்,

இதுவரை 34 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் 500 கிலோ வெடி மருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தேவாரம் தெரிவித்தார்.

சிறுதலைக் காட்டிலிருந்து வேதாரணியம் சதுப்பு நிலக் காட்டுப்பகுதிகளில் பொலிசாரின் தேடுதல் நடவடிக்கை தீவிரப் படுத்தப்பட்டுள்ளதாகவும் இக்காட்டுப் பகுதிக்குள் கள்ளக் கடத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த 26 உள்ளூர்காரர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும்,

வேதாரணியத்தில் பாஸ்போர்ட் இன்றி எட்டு இலங்கைத் தமிழ் அகதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தேவாரம் தெரிவித்தார்.